# BSNL ஊழியர் சங்கம்
# தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:88** **தேதி:-04.01.2016**

## வருமான வரி இலாகாவிடம் இருந்து BSNLக்கு 10,000 கோடி ரூபாய் மற்றும் சில மத்திய சங்க செய்திகள்

அன்பார்ந்த தோழர்களே,

வருமான வரி இலாகாவிடமிருந்து வெகு விரைவில் BSNL நிறுவனம் 10,000 கோடி ரூபாய்களை பெற உள்ளது. இதனை BSNL CMD திரு அனுபம் ஸ்ரீவஸ்தவா தெரிவித்துள்ளார். புத்தாண்டு தினத்தன்று கார்ப்பரேட் அலுவலகத்தில் நடைபெற்ற ஒரு சந்திப்பில் அவர் இதனை தெரிவித்துள்ளார். கடந்த 15 ஆண்டுகளாக BSNLன் கணக்குகளை DOT, RECONCILE செய்யாததால் வருமான வரி இலாகா BSNLலிடமிருந்து 10,000 கோடி ரூபாய்களை அதிகமாக வசூலித்திருந்தது. ஏப்ரலில் நடைபெற்ற இரண்டு நாட்கள் வேலை நிறுத்தத்தின் போது FORUM இந்த பிரச்சனையை DOT செயலரிடம் எடுத்துச் சென்றது. 01.05.2015 அன்று நடைபெற்ற பேச்சு வார்த்தையின்போது BSNLன் கணக்குகளை DOT வெகு விரைவில் RECONCILE செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று DOT செயலாளர் கூறியிருந்தார். முதல் தவணையாக 891 கோடி ரூபாய்களை வருமான வரி இலாகாவிடமிருந்து BSNL பெற உள்ளதாக CMD தெரிவித்துள்ளார்.

**BSNL ஊழியர் சங்கத்திற்கு மாற்று இடம்**:-தற்போது BSNL ஊழியர் சங்கத்திற்கு டெல்லியில் D7, Telegraph Place, Gole Market என்ற இடத்தில் இடம் ஒதுக்கப்பட்டு இருந்தது. இந்திய அரசாங்கம் இந்த இடத்தை ஜார்கண்ட் மாநில அரசிற்கு வழங்கிவிட்ட படியால் நமது மத்திய சங்கம் மாற்று இடம் வழங்க வேண்டும் என கோரியிருந்தது. தற்காலிகமாக தற்போது புதுடெல்லியில் உள்ள அதுல் குரோவ் சாலையில் இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. விரைவில் BSNL ஊழியர் சங்கத்திற்கு பொருத்தமான இடம் வழங்கப்படும் என DIRECTOR(HR) நமது பொது செயலாளர் தோழர் P.அபிமன்யுவிடம் உறுதி அளித்துள்ளார்.

**MTNL இலவச ரோமிங் வசதி அறிமுகம்**:- 01.01.2016 முதல் MTNL நிறுவனமும் இலவச ரோமிங் வசதியை அறிவித்துள்ளது. இதன் காரணமாக MTNL சந்தாதாரர்களிடம், அதன் சேவை இல்லாத இடங்களில், ரோமிங் கட்டணத்தை MTNL நிறுவனம் வசூலிக்காது என தொலை தொடர்பு அமைச்சர் திரு ரவிசங்கர் பிரசாத் தெரிவித்துள்ளார்.

**M.S.S.ராவின் ஓய்வூதிய பலன்கள் நிறுத்தி வைப்பு**:-கேரள மாநில முன்னாள் CGM M.S.S.ராவ் 31.12.2015 அன்று ஓய்வு பெற்றுள்ளார். ஆனால் அவரின் ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதிய பலன்களை அனைத்தும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. அவருக்கு PROVISIONAL PENSION மட்டுமே தற்போது வழங்கப்படும் என கார்ப்பரேட் அலுவலக உத்தரவு தெரிவிக்கின்றது. அவரது ஊழல் நடவடிக்கைகள் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது. இந்த M.S.S.ராவ்தான் அவருடைய ஊழல் நடவடிக்கைகள் தொடர்பாக நமது இணைய தளத்தில் வெளியிட்டதற்காக நமது பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு மற்றும் மத்திய சங்கத்தின் இதர தலைவர்கள் மீது வக்கீல் நோட்டீஸ் அனுப்பியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

**IDA 4.5% உயர்வு**:- 01.01.2016 முதல் நமது பஞ்சப்படி 4.5% உயர்ந்துள்ளது. தற்போது பெற்றுக் கொண்டிருக்கும் 107.9%த்துடன் 4.5% இணைந்து 112.4% கிடைக்கும். DPE உத்தரவு வெளியிட்ட பின் இது அமுலுக்கு வரும்.

**7ஆவது உறுப்பினர் சரிபார்ப்பு துவங்குகிறது**:- 7ஆவது உறுப்பினர் சரிபார்ப்பு தேர்தல் துவங்க உள்ளது. 7ஆவது உறுப்பினர் சரிபார்ப்பு தேர்தலை சுமுகமாக நடத்திட 11.01.2016 அன்று அனைத்து சங்கங்களின் கூட்டத்தை புதுடெல்லியில் நமது கார்ப்பரேட் அலுவலகம் கூட்டியுள்ளது.6ஆவது உறுப்பினர் சரிபார்ப்பில் கலந்துக் கொண்ட அனைத்து சங்கங்களும் அழைக்கப்பட்டுள்ளன.இந்தக் கூட்டத்தில் இருந்து 7ஆவது உறுப்பினர் சரிபார்ப்பு தேர்தல் துவங்க உள்ளது. எனவே அனைத்து கிளை, மாவட்ட மாநில சங்கங்களும் 7ஆவது உறுப்பினர் சரிபார்ப்பு தேர்தலை சந்திக்க தயாராக வேண்டுமென மத்திய சங்கம் கேட்டுக்கொண்டுள்ளது.

**இணைய சமன்பாட்டிற்காக TRAIக்கு மகஜர் அனுப்புக:-** “FREE BASICS BY FACEBOOK” என்ற பெயரில் நமது இணைய சமன்பாட்டு உரிமைக்கு எதிராக FACEBOOK நிறுவனம் ஒரு தாக்குதலை தொடுத்துள்ளது. இணைய சமன்பாடு என்றால் நமக்கு தேவையான அனைத்து வலைத்தளங்களுக்கும் எந்த ஒரு பாகுபாடும் இன்றி நாம் செல்லும் வசதி. இணையதள சேவை வழங்கும் நிறுவனம் எந்த ஒரு வலைத்தளத்திற்கு செல்வதையும் தடை செய்யக் கூடாது. இதற்காக கட்டணங்களை வேறு வேறாக மாற்றக் கூடாது. எனவே நம் தோழர்கள் அனைவரும் WWW.fsmi.in என்ற இணைய தளத்திற்கு உடனடியாக சென்று அதில் உள்ள மகஜரை கையெழுத்திட்டு TRAIக்கு 07.01.2016க்கு முன் அனுப்பிட வேண்டும்.

**BSNL MRS கமிட்டியின் கூட்டம் 08.01.2016 அன்று கூடுகிறது:-** BSNL MRS திட்டத்தின் கீழ் நல்ல மருத்துவமனைகளை அணுகவோ, மருத்துவ வசதி பெறவோ பல இடர்பாடுகள் ஏற்பட்டுள்ளது. எனவே கொல்கொத்தா அகில இந்திய மாநாட்டில் இத்திட்டத்தை மறு பரிசீலனை செய்ய வேண்டும் என முடிவெடுக்கப்பட்டது. இது தொடர்பாக பரிசீலனை செய்ய ஒரு கமிட்டி உருவாக்கப்படும் என தேசிய கவுன்சில் கூட்டத்தில் முடிவெடுக்கப் பட்டது. ஆனால் கார்ப்பரேட் அலுவலகத்தில் தேவையற்ற தாமதம் ஏற்படுத்தப்பட்டதால் நமது மத்திய சங்கம் DIRECTOR(HR) அவர்களிடம் தனது கடுமையான அதிருப்தியை பதிவு செய்தது. இதற்கு பின்னரே ஒரு குழு அமைக்கப்பட்டது. இதன் கூட்டம் 08.01.2016 அன்று நடைபெற உள்ளது. ஊழியர்கள் சந்திக்கும் பிரச்சனைகளுக்கு தீர்வு காண அனைத்து முயற்சிகளையும் நமது மத்திய சங்கம் எடுக்கும்.

**அஹமது நகரில் நமது விரிவடைந்த மத்திய செயற்குழு:-** BSNL ஊழியர் சங்கத்தின் விரிவடைந்த மத்திய செயற்குழு பிப்ரவரி 19 முதல் 21 வரை மராத்திய மாநிலத்தில் உள்ள அஹமது நகரில் நடைபெற உள்ளது. மத்திய சங்க நிர்வாகிகளும், மாநில செயலாளர்களும், மாவட்ட செயலாளர்களும் பங்கேற்க உள்ளனர். பார்வையாளர்கள் அனுமதி இல்லை.

**78.2 பஞ்சப்படி இணைப்பின் அடிப்படையில் அலவன்ஸ்கள்:-** நிர்வாகத்திற்கும் FORUMக்கும் இடையில் 12.06.2012 அன்று போடப்பட்ட ஒப்பந்தத்தில் ஒரு சில அலவன்ஸ்கள் 68.8% பஞ்சப்படி அடிப்படையில் தற்காலிகமாக ஏற்றுக் கொள்வதாகவும், 01.04.2013ல் அது மறு பரிசீலனை செய்யவும் ஏற்றுக் கொள்ளப்படிருந்தது. ஆனால் அதனை நிர்வாகம் இதுவரை பரிசீலிக்கவில்லை. அதனை உடனடியாக பரிசீலிக்க வேண்டும் என்று 28.12.2015 அன்று BSNL CMDஐ கேட்டுக் கொண்டதுடன் நமது மத்திய சங்கம் அதற்கான கடிதம் ஒன்றையும் கொடுத்துள்ளது.

**நேரடி நியமன ஊழியர்களின் ஓய்வூதிய பலன்கள்:-** 28.12.2015 அன்று BSNL CMDஐ சந்தித்த நமது பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு, நேரடி நியமன ஊழியர்களுக்கான ஓய்வூதிய பங்கீடு தொடர்பாக இறுதி செய்யப்படாததிற்கு தனது வருத்தத்தை பதிவு செய்தார். 01.10.2000க்கு பின் பணி நியமனம் செய்யப்பட்ட பல RM தோழர்கள் ஓய்வூதிய பலன் ஏதுமின்றி ஓய்வு பெற்றதை சுட்டிக்காட்டினார். DPE உத்தரவின் அடிப்படையில் அதனை உடனடியாக இறுதி செய்ய வேண்டும் என BSNL CMDஐ கேட்டுக் கொண்டதுடன் நமது மத்திய சங்கம் அதற்கான கடிதம் ஒன்றையும் கொடுத்துள்ளது.

**ஊதிய தேக்க நிலை:-** ஊதிய தேக்க நிலை தொடர்பாக கூட்டு போராட்டக் குழுவுடன் 11.01.2016 அன்று மாலை 3 மணிக்கு நிர்வாகம் பேச்சு வார்த்தை நடத்த உள்ளது. 21.12.2015 அன்று BSNL ஊழியர் சங்கத்திற்கும் DIRECTOR (HR) க்கும் இடையே நடைபெற்ற பேச்சு வார்த்தையில் இந்த முடிவு எடுக்கப்பட்டிருந்தது.

**கேடர்களின் பெயர் மாற்றம்:-** 28.12.2015 அன்று GM(Restg) திரு A.M.குப்தா அவர்களை சந்தித்த BSNL ஊழியர் சங்கத்தின் பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு கேடர் பெயர் மாற்றத்திற்கு நிர்வாகக் குழுவின் ஒப்புதலை பெற அவர் எடுத்த முயற்சிகளுக்கு நன்றி தெரிவித்ததுடன், இயக்குனர் குழுவின் ஒப்புதலை விரைவில் பெற தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுடன்,

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநில செயலாளர்**